

# இரண்டாயிரம் ரூபாய்

## ஞாபகார்த்த நாணயத் தாள்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## ரூ.2000 ஞாபகார்த்த நாணயத் தாள்

இலங்கை மத்திய வங்கி அதன் 75 ஆவது ஆண்டுநிறைவைக் குறிக்கும் முகமாக 2025 ஒகத்து 28 அன்று ரூ.2000 ஞாபகார்த்த நாணயத் தாளை வெளியிட்டது. இவ்வாண்டுநிறைவின் கருப்பொருள் "சுபீட்சத்திற்கான உறுதிப்பாடு" என்பது தேசத்தின் முன்னேற்றத்திற்கான அத்திவாரமாக பொருளாதார உறுதிப்பாட்டைப் பேணுவதற்கான மத்திய வங்கியின் தளராத அர்ப்பணிப்பினைப் பிரதிபலிக்கின்றது. இத்தனித்துவமிக்க நாணயத் தாள் தேசத்திற்கான உறுதிமிக்க சேவையினைக் கொண்ட 75 ஆண்டுகளைக் கொண்டாடி, பொருளாதார தாக்குப்பிடிக்கும் தன்மையையும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சியையும் பேணிவளர்ப்பதில் மத்திய வங்கியின் வகிபாகத்தை எடுத்துக்காட்டுகின்றது. நாணயத் தாள் மத்திய வங்கியின் தொலைநோக்கு மற்றும் பணி அத்துடன் இலங்கையின் சுபீட்சத்திற்கான அதன் தொடர்ச்சியான கடமைப்பொறுப்பு என்பவற்றில் எதிரொலிக்கும் எண்ணப்பாங்குகளையும் உணர்த்துகின்றது.

## முன்பக்கம்




5 1 4 3 4 2

## பின்பக்கம்




2 1 4




## தோற்றம் 1 2

வாள் ஏந்திய சிங்கத்தைக் கொண்ட நீர்வரி அடையாளத்தைப் பார்ப்பதற்கு நாணயத் தாளை வெளிச்சத்தில் பிடிக்கவும்.

நாணயத் தாளை வெளிச்சத்தில் நீங்கள் பிடிக்கின்ற போது ஊடாகப் பார்க்கும் பாதுகாப்புப் பண்பில் வாள் ஏந்திய சிங்கத்தின் முழுமையான உருவத்தைப் பார்க்கவும்.

தாளின் வடிவமைப்பில் மறைக்கப்பட்ட நுண்ணிய எழுத்துக்களைப் பார்க்கவும்.



## சரித்துப்பார்த்தல் 3

நீலத்தில் இருந்து பச்சையாகவும் மறுதலையாகவும் நிறம் மாறுகின்ற பாதுகாப்பு நூலில் வர்ண மாற்றத்தைப் பார்ப்பதற்கு தாளை மேலிருந்து கீழ் சரித்துப் பார்க்கவும் அத்துடன் பாதுகாப்பு நூலில் கொழும்பு வெளிச்சவீட்டு மணிக்கூட்டுக் கோபுரத்தையும் 2000 எண்ணையும் கொண்ட உருவத்தையும் பார்க்கவும்.






## தொட்டுணர்தல் 4 5

2000 வகை மற்றும் வங்கியின் தலைப்பில் உயர்த்தப்பட்ட அச்சினைத் தொட்டுணரவும்.

அத்துடன் ஒவ்வொரு கட்டம் மீதும் வைர வடிவத்துடனான ஆறு கட்டங்களையும் உணருங்கள். நாணயத் தாளின் பெறுமதியினை கட்புலக் குறைபாடு உடையோர் இனங்காண்பதற்கு தொட்டுணரக்கூடிய பண்பு உதவுகின்றது.